**சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08**

**ந.க.எண். 9010 / ஆ5 /2024 நாள். .11.2024**

**பொருள்** அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச்/ஏப்ரல் 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – பகுதி 1-ல் தமிழ் மொழிப்பாடம் அல்லாத பிற மொழிப்பாடம் தேர்வெழுத தகுதியான மாணவ/மாணவியர்களின் விவரம் அனுப்பி வைக்கக் கோருதல் – சார்ந்து.

**பார்வை.**

1. தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006- தமிழ்நாடு அரசிதழ் எண்.136, நாள்.12.06.2006.
2. சென்னை-06, தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.18640/எப்1/06, நாள்.17.06.2006.
3. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.72716/சி5/இ2/2014, நாள்.03.06.2014.
4. அரசாணை (நிலை) எண்.232, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள்.08.11.2017.
5. அரசாணை (நிலை) எண்.37, பள்ளிக் கல்வி (கஆப) துறை, நாள்.06.03.2018.
6. அரசாணை (நிலை) எண்.42, பள்ளிக் கல்வித்(கஆப) துறை, நாள்.13.02.2024.
7. சென்னை-06, அரசு தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண். 017793/பி1/2023, நாள்.11.10.2024.

.....

பார்வை 1-ல் காணும் அரசிதழ் மற்றும் பார்வை 2 மற்றும் 3-ல் காணும் செயல்முறை ஆணைகளின்படியும், மார்ச் 2016 முதல் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் பகுதி 1-ல் தமிழ் மொழி கட்டாயம் முதல் மொழிப் பாடமாகக் கொண்டு தேர்வெழுதும் முறை நடைமுறைபடுத்தப்பட்டது.

எனவே, பார்வை 1-ல் காணும் அரசிதழ் அடிப்படையில் நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் பள்ளி மாணவர்கள் பகுதி 1-ல் தமிழ் மொழிப்பாடம் கட்டாயமாக தேர்வெழுதும் வகையில், மாணாக்கரது பெயர்பட்டியல் (Nominal Roll) தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை-4ல் காணும் அரசாணை படி "அயல் மாநிலங்களிலிருந்து வேலை நிமித்தமாகவோ அல்லது பணி மாறுதலிலோ 9 அல்லது 10 ஆம் வகுப்பில் தமிழை தாய்மொழியாக கொண்டிராத மாணவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேரும் மாணவர்களுக்கு மட்டும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி 1-ன் கீழ் தமிழ்

மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்களிக்க பள்ளிக் கல்வி இயக்குநர்/மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் ஆகியோருக்கு அனுமதியளித்தும்".

பார்வை 5-ல் காணும் அரசாணையின்படி "தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டம் அல்லாத பிற பாடத்திட்டங்களில் பயின்று 9 மற்றும் 10 ஆம் வகுப்பில் மாநிலப் பாடத்திட்டத்தில் சேரும் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி 1-ல் தமிழ்மொழி பாடம் எழுதுவதிலிருந்து 2023-2024 ஆம் கல்வியாண்டு வரையில் விலக்களித்து" ஆணை வெளியிடப்பட்டது.

மேலும் பார்வை 6-ல் காணும் அரசாணையில் விருப்பமொழிப் பாடத்தில் தேர்வெழுதும் மாணவர்கள் விருப்ப மொழிப்பாடத்தில் தேர்ச்சி பெற குறும அளவு 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெறவேண்டும் என நிர்ணயம் செய்து மதிப்பெண் விவரத்தினை சான்றிதழில் குறிப்பிடலாம் எனவும், அதனை 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மார்ச்/ஏப்ரல் – 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு, பகுதி 1-ல் பார்வை 4-ல் காணும் அரசாணையின்படி, தமிழ் மொழிப்பாடம் அல்லாத பிறமொழிப்பாடம் தேர்வெழுதும் தகுதியான மாணாக்கர்களின் விவரங்களை இணைப்பில் காணும் பட்டியலின்படி தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளிலிருந்து பெற்று 02.12.2024-க்குள் மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் கடித மூலமாகவும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், தங்களால் பரிந்துரைக்கப்படும் மாணவர்களுக்கு மட்டுமே பகுதி -1 மொழிப்பாடத்தில் தமிழ் பாடம் விலக்களிக்கப்பட்டு, பிற மொழிப்பாடத்தில் தேர்வெழுத அனுமதிக்கப்படும் என்பதனால், அரசாணைகளில் குறிப்பிட்டுள்ளபடி தகுதியுள்ள மாணவர்களின் பட்டியலை தங்களின் மேற்பார்வையில் தயாரித்து வழங்கிடுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: படிவம்

22.11.24

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

22/11/2024

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
சென்னை மாவட்டம்.

நகல்

அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள், சென்னை மாவட்டம்.